**உடுபத்தாவ பிரதேச சபை**
**குருணாகல் மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 27 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கை 2020 ஜுன் 17 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 ஜுலை 22 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து உடுபத்தாவ பிரதேச சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிக்கூற்றுகளில் காண்பிக்கப்படும் 03 கணக்குகளுக்கு உரிய மீதிகள் மற்றும் அவற்றுக்கு உரிய உப ஆவணங்களில் காண்பிக்கப்படும் மீதிகள் ஆகியவற்றுக்கிடையே ரூபா 2,442,485 பெறுமதியான தொகைான வேறுபாடு காணப்பட்டது. | உரிய மீதிகளில் வேறுபாடுகளை இணங்க வைத்து சரி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | வேறுபாடுகளைக் கண்டறிந்த உடனே சரி செய்ய நடவடிக்கை எடுப்பதாக அறியத் தருகிறேன். |
| (ஆ) | ரூபா 157,862,974 தொகை பெறுமதியான 05 கணக்குகளுக்கு உரிய உரிமைச் சான்றிதழ்கள் மற்றும் புதுப்பிக்கப்பட்ட நிலையான சொத்துக்கள் ஆவணங்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை. | நிதிக்கூற்றுகளில் காண்பிக்கப்படும் கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தக் கூடிய சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | காணிகள் மற்றும் கட்டிடங்கள், மரத் தளபாடங்கள் மற்றும் உபகணரங்கள் ஆகியவற்றோடு வாகனங்கள் தொடர்பான நிலையான சொத்துக்கள் ஆவணங்கள் அனைத்தும் புதுப்பிக்கப் பட்டுள்ளதை அறியத் தருகிறேன். |

## 1.4 இணங்காமைகள்

### 1.4.1 சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றம் முகாமைத் தீர்மானங்ளுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மை கீழே காட்டப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 154(1) ஆம் பிரிவு | காணிகளை துண்டு பிரித்து விற்கும் போது விற்பனை விலையில் 1% அறவிடப்பட வேண்டும் எனினும், பெறுமதி மதிப்பிடப்பட்ட விற்பனை விலையில் 1% மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. | விற்பனை அறிக்கைக்கு ஏற்ப எஞ்சிய வரிப்பணம் அறவிடப்பட வேண்டும். | நிறுவனத்தினால் வழங்கப்படும் விற்பனை விபரங்கள் வருமானப் பரிசோதகரிடம் சமர்ப்பிக்கப்பட்டு சபையினால் அறவிடப்பட வேண்டிய நிலுவை 1% வரிப்பணம் இருப்பின் மீளவும் அறவிட நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாகம்) விதிகள் | | | |
| | (i) விதி இல 5(6) | உரிய காலப்பகுதியினுள் அறவிடப்பட வேண்டிய அனைத்து வருமானங்கள் மற்றும் கட்டணங்கள் என்பனவற்றை சேகரிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. | நிலுவை வருமானத்தை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வருமானத்தை அறவிட சட்ட ரீதியாக சிவப்பு அறிவித்தல், சொத்துக்களுக்கு தடை விதித்தல் போன்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதோடு, ஏனைய வருமானங்களையும் சட்ட ரீதியாக அறவிட வருங்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக அறியத் தருகிறேன். |
| | (ii) விதி இல 218 | சபையின் அனைத்து காணி மற்றும் கட்டடங்கள் என்பனவற்றை ஒரு வருடத்திற்கு ஒரு முறையேனும் பரீட்சிக்கப்பட்டிருக்க வில்லை. | காணி மற்றும் கட்டடம் என்பனவற்றை பரீட்சிக்க வேண்டும். | 2020 வரவுசெலவுத் திட்டத்தில் சபை இடங்களைச் சூழ புதிய கம்பி வேலிகளை நிறுவுவதற்காக 08 இலட்சம் ரூபாய் பெறுமதியான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. சபை இடங்களைப் பராமரிப்பதற்காக ஒரு இலட்சம் ரூபாய் பெறுமதியான தொகை ஒதுக்கப்பட்டுள்ளது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 30,524,374 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 27,297,032 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உண்மையான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | வருமானம் | 2019 ஆம் ஆண்டு | | | | 2018 ஆம் ஆண்டு | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| I. | வீதவரியும் வரியும் -10 | 4,155,000 | 4,449,854 | 3,994,856 | 2,568,465 | 3,826,000 | 4,243,838 | 3,929,859 | 2,113,468 |
| II. | வாடகை -20 | 12,093,200 | 11,949,049 | 11,951,499 | 24,011 | 12,766,000 | 11,820,172 | 11,931,117 | 26,461 |
| III. | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் - 30 | 843,050 | 1,256,605 | 1,256,605 | - | 747,550 | 800,030 | 800,030 | - |
| IV. | ஏனைய வருமானம் - 40,50,60,70 | 92,508,450 | 88,932,213 | 101,838,839 | 62,468,755 | 72,951,650 | 79,681,990 | 102,980,349 | 69,641,885 |
| | மொத்தம் | 109,599,700 | 106,587,721 | 119,041,799 | 65,061,231 | 90,291,200 | 96,546,030 | 119,641,355 | 71,781,814 |

#### 2.2.2 வீத வரிகள் மற்றும் வரிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் அறவிடப்பட வேண்டியிருந்த வீதவரி வரி மற்றும் ஏக்கர் வரி நிலுவையில் இருந்து 2020 ஜூன் 26 ஆம் திகதிக்கு வீதவரி நிலுவையில் ரூபா 2,201,647 பெறுமதியான தொகை மற்றும் ஏக்கர் வரி நிலுவையில் ரூபா 60,383 பெறுமதியான தொகை இனியும் அறவிடப்பட வேண்டியிருந்தது. | நிலுவையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எஞ்சிய நிலுவைத் தொகைகளை அறவிட நடவடிக்கை எடுப்பதாக அறியத் தருகிறேன். |

### 2.2.3 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மாகாண சபையின் தலைமை செயலாளரிடமிருந்து மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆம் திகதிக்கு அறவிடப்பட வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் முறையே ரூபா 2,654,137 மற்றும் ரூபா 51,030,600 ஆக காணப்பட்டன. | நிலுவைத் தொகையைப் பெற்றுக் கொள்ள வேண்டும். | மாகாண சபையின் தலைமை செயலாளரிடம் இருந்து இடையிடையே வேண்டுகோள்கள் விடுக்கப்பட்டதோடு, கடைசியாக 2020 மார்ச் 31 இல் உரிய முத்திரைக் கட்டணம் மற்றும் நீதிமன்றத் தண்டப் பணம் தொடர்பாக வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளதோடு, அதற்கிணங்க பணம் கிடைத்துக் கொண்டிருப்பதை அறியத் தருகிறேன். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

#### (அ) துணை விதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| பிரதேச சபைச் சட்டத்தின் 126 ஆவது பிரிவின் கீழ் 30 பிரதான செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக உப விதிகள் விதிக்கப்பட வேண்டும் எனினும் சபையின் தேவைக்கு ஏற்ப உப விதிகளை விதிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | புதிய விடயங்களுக்கு ஏற்ப உப விதிகளை விதிக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | இது வரையில் விதிக்கப்பட்டிருக்கும் ஏற்றுக் கொள்ளப்பட்ட துணை விதிகள் சபையினால் பின்பற்றப்படுவதோடு புதிய துணை விதிகள் சபையினால் தயாரிக்கப்படவில்லை. முச்சக்கர வண்டித் தரிப்பிடங்களை சீராக்குவது தொடர்பாக வாகனங்களை நிறுத்தி வைப்பது போன்ற ஏற்றுக் கொள்ளப்பட்ட துணை விதிகளுக்கு இணங்கவும், விளம்பரப் பதாதைகளுக்காக அறிவித்தல் விளம்பரங்கள்/ சுற்றாடல் காட்சிகள் போன்ற ஏற்றுக் கொள்ளப்பட்ட துணை விதிகளுக்கு இணங்கவும், மயானங்களுக்காக மயானங்கள் தொடர்பான ஏற்றுக் கொள்ளப்பட்ட துணை விதிகளுக்கு இணங்கவும் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. |

**(ஆ) திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சேகரிக்கப்படும் கழிவுகளை வேறு பிரிக்காமல் கெந்தயாவத்த கழிவகற்றும் கட்டிடத்தின் பின்னால் உள்ள திறந்த வெளியில் கொட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | கழிவுகள் திறந்த வெளியில் கொட்டப்படக் கூடாது. | தற்போது உக்காத கழிவுகளை வைக்கக் கூடிய கட்டிடத்தின் பணிகள் பூர்த்தியாகிக் கொண்டிருப்பதோடு, பேல் இயந்திரம் பொருத்தப்பட்டு உக்காத கழிவுகளை இன்சி நிறுவனத்திடம் ஒப்படைக்க வருங்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக அறியத் தருகிறேன். |

**(இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி இலக்குடன் நிகழ்ச்சிகளைத் திட்டமிட்டிருந்த போதிலும், இலக்குகள், வெற்றி அட்டவணைகள் மற்றும் ஆண்டிறுதியில் முன்னேற்றம் அளவிடப்பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி வழிகாட்டலுக்கு ஏற்ப நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 2021 வரவுசெலவுத் திட்ட அறிவித்தலில் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளின் நோக்கங்கள் மற்றும் அட்டவணைகளை இனங்காணவும் அதற்கிணங்க முன்னேற்றத்தை அளவிடவும் நடவடிக்கை எடுக்க எதிர்பார்த்துள்ளதை அறியத் தருகிறேன். |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | கட்டிட விண்ணப்பங்களுக்கு அனுமதி அளித்தல், கையேற்காமை, சான்றிதழ்களை வழங்குதல், தெரு விளக்குகளை பழுதுபார்த்தல், அபாயம் விளைவிக்கக் கூடிய மரங்களைத் தரித்தல், இணக்கச் சான்றிதழ்களை வழங்குதல் மற்றும் அவ்வாறான ஏனைய சேவைகளை வழங்கும் இலக்குகளை குடியுரிமை சாசனத்தின் கீழ் காட்சிப்படுத்தியிருந்த போதிலும் அந்த இலக்குகளை அடையக் கூடிய விதத்தில் சேவைகளை | குடியுரிமை சாசனத்தில் குறிப்பிடப்பட்ட இலக்குகளை அடையக் கூடிய விதத்தில் திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டும். | குடியுரிமை சாசனத்தின் இலக்குகள் குறிப்பிடப்பட்ட போதிலும், இயலுமான அனைத்து சந்தர்ப்பங்களிலும் அந்த தினத்திலேயே சேவையை மேற்கொண்டு பெற்றுத் தர முயற்சிப்பதாக அறியத் தருகிறேன். |

| | | | |
|---|---|---|---|
| | வழங்கும் நடவடிக்கைகளைத் திட்டமிட்டிருக்காத காரணத்தால் எதிர்பார்த்த இலக்குகளை நெருங்காத சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. | | |
| (ஆ) | 2007 ஆம் ஆண்டில் உடுபத்தாவ நகரத்தில் புதிய சபை காரியாலயத்தின் முன்னால் மூன்று மாடி கட்டிடமொன்று அனுமதி அளிக்கப்பட்ட கட்டிட வரையறைகளை மீறி நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும் இது வரையில் சபையினால் எவ்வித சட்ட ரீதியான நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. 2019 திசெம்பர் 12 வரை 03 மாடிகளும் நிர்மாணிக்கப்பட்டு கட்டிடம் உபயோகப்படுத்தப்பட்டுக் கொண்டிருந்ததோடு அந்த சட்டத்துக்கு புறம்பான நிர்மாணத்துக்கு 2015 யூன் 09 அன்று இணக்கச் சான்றிதழும் வழங்கப்பட்டிருந்தது. | சட்டத்துக்குப் புறம்பான நிர்மாணங்கள் தொடர்பாக செயலாற்றல் மற்றும் நீதமான வழிமுறைகள் பின்பற்றப்பட வேண்டும். | கணக்காய்வில் சுட்டிக் காட்டப்பட்ட விடயங்கள் அனைத்தும் உண்மையானவை என்று ஏற்றுக் கொள்கிறேன். இது 12 ஆண்டுகள் அளவு நீண்ட கால நிகழ்வு ஆகும். இந்தச் சிக்கல் தொடர்பாக உள்ளூராட்சித் திணைக்களத்தினால் விசாரணையொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. அந்த விசாரணை அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்ட விதத்தில் 2007/72 கட்டிட திட்டங்களுக்கு ஏற்ப வழங்கப்பட்டிருந்த இணக்கச் சான்றிதழ் 2020 மார்ச் 03 இல் இருந்து ரத்து செய்யப்பட்டுள்ளதாக கட்டிடத்தின் தற்போதைய உரிமையாளருக்கு அறியத் தரப்பட்டுள்ளது. தற்போது தகவல்கள் சட்டம் மூலமாகவும், கோரப்பட்ட தகவல்களில் 95% இற்கும் அதிகமான அளவுக்கு பதில் வழங்கப்பட்டிருப்பதாகவும் அறியத் தருகிறேன். |
| (இ) | பளுகமுவ, தும்மலசூரிய, கஜு கஹமுல ஹேன துண்டு பிரிக்கப்பட்ட இடங்களில் கட்டிட வரையறைகளை மீறி 02 மாடிகளைக் கொண்ட கட்டிடம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டிருந்தது. ஒப்புதல் அளிக்கப்பட்ட திட்டத்துக்கு இணங்காத அனுமதிக்கப்படாத பாகங்களை நிர்மாணித்த காரணத்தால் அருகில் இருந்த பாதையில் தண்ணீர் சேர்ந்து டெங்கு நுளம்புகளுக்கு ஏதுவான சூழல் உருவாகியிருந்தது. | அனுமதிக்கப்படாத நிர்மாணங்கள் தொடர்பாக செயலாற்றலுடன் கூடிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அதற்கிணங்க இலக்கம் 04/08/49 மற்றும 2020 ஜனவரி 13 ஆம் திகதிய கடிதம் மூலமாக அனுமதியில்லாமல் நிர்மாணிக்கப்பட்டுள்ள பாகங்கள் அந்தக் கடிதம் கிடைத்த 14 நாட்களுக்குள் அகற்றப்பட வேண்டும் என்று அறியத் தரப்பட்டது. இதுவரையில் எந்தப் பதிலும் அளிக்கப்படாத காரணத்தால், வரும் மா நகர சபையில் முன்வைத்து இது தொடர்பாக அனுமதியைப் பெற்று சட்ட ரீதியான நடவடிக்கைகளைச் செயற்படுத்த நடவடிக்கை எடுப்பதாக அறியத் தருகிறேன். |
| (ஈ) | மீளாய்வாண்டின் இறுதித் தினத்துக்கு கிடைக்க வேண்டிய கணக்கு மீதியில் உள்ளடக்கப்பட்ட ரூபா 25,083,780 பெறுமதியான தொகை 01 முதல் 03 ஆண்டு காலத்துக்கும் ரூபா 4,602,74 பெறுமதியான தொகை 03 | இனிமேலும் அறவிடப்பட வேண்டிய மீதிகளை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிலுவைத் தொகைகளை அறவிட நடவடிக்கை எடுப்பதாக அறியத் தருகிறேன். |

| | | | |
|---|---|---|---|
| | ஆண்டுக்கு மேற்பட்ட காலத்துக்கும் உரியன. | | |
| (உ) | மீளாய்வாண்டின் இறுதித் தினத்துக்கு செலுத்தப்பட வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி 01 ஆண்டு முதல் 03 ஆண்டு வரையான காலத்துக்கு ரூபா 1,022,146 பெறுமதியான தொகை ஆகவும் 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலத்துக்கு ரூபா 409,040 பெறுமதியான தொகை ஆகவும் கால அளவு கண்டறியப்பட முடியாத ரூபா 1,431,960 பெறுமதியான தொகை ஆகவும் காணப்பட்டது. | செலுத்த வேண்டிய மீதிகளை செலுத்தித் தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஒரு ஆண்டுக்கும் குறைவான காலப்பகுதிக்குள் கடன்கொடுத்தோருக்கு கடனைச் செலுத்தித் தீர்க்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதால் அதற்கிணங்க தொழில் கடன்கொடுத்தோருக்கும் செலுத்தித் தீர்த்துக் கொண்டிருப்பதை அறியத் தருகிறேன். இன்னும் வைப்புகளுக்கு உரிய கால அளவுக்கு ஏற்ப கொடுப்பனவுகளை தற்போது செலுத்திக் கொண்டிருப்பதை அறியத் தருகிறேன். |

## 3.3 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதித் தினத்தில் 19 வெற்றிடங்களும் 03 மேலதிக ஊழியர்களும் காணப்பட்டனர். | தேவையான வெற்றிடங்களை நிரப்புவதற்கு மற்றும் மேலதிகமாக உள்ளதை ஒரு ஒழுங்குக்குள் கொண்டு வரவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். | பதவி வெற்றிடங்களுக்காக ஊழியர்களைப் பெற்றுத் தருமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ள போதிலும் ஊழியர் பற்றாக்குறையினால் இதுவரை வழங்கப்படவில்லை. |

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.4.1 கையேற்கப்படாத சொத்துகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 145,400 தொகை பெறுமதியான மோட்டர் க்ரேடர் மற்றும் ரூபா 60,600 தொகை பெறுமதியான க்ரூ கெப் வாகனம் ஆகியவற்றை கையேற்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2018 ஆம் ஆண்டில் இந்த மோட்டர் க்ரேடர் மற்றும் குரூ கெப் வாகனத்தைக் கையேற்க அமைச்சிடம் உரிய கடிதம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |

### 3.4.2 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்படும் சொத்துக்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதியில் பெறுமதி குறிப்பிடப்படாத தண்ணீர் பவுசர் ஒன்று மற்றும் ட்ரக்டர் டேலர் ஒன்று செயலற்றுக் காணப்பட்டன. | பயனுறுதி வாய்ந்த பயன்பாடு அல்லது வேறு பொருத்தமான நடவடிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டும். | இந்த டேலர் வாகனம் மற்றும் தண்ணீர் பவுசர் ஆகியன உபயோகப்படுத்த முடியாத நிலைமையில் இருப்பதால் இவற்றை பழுதுபார்த்து பாவனைக்கு எடுக்கக் கூடிய நிலைமைக்கு மாற்ற இயந்திர பொறியியலாளரின் மேற்பார்வையைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. |
| (ஆ) | உள்ளக இணைப்பு தொடர்புடைய கொங்க்றீட் கல் தொகுதிக்காக நிர்மாணிக்கப்பட்டிருந்த கட்டிடம் உபயோக மற்றுக் காணப்பட்டது. | பயனுறுதி வாய்ந்த பயன்பாடு அல்லது வேறு பொருத்தமான நடவடிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டும். | வாடகைக்கு வழங்கும் நடவடிக்கைக்காக அந்த செயற்திட்டம் அமைந்துள்ள இடத்தின் அளவைக் கணித்து திட்டமொன்று தயாரித்து மேலதிக நடவடிக்கைகளை மேற்கொண்டு வருங்காலத்தில் வாடகைக்கு வழங்க எதிர்பார்க்கப்பட்டுள்ளதாக அறியத் தருகிறேன். |

### 3.5 பெறுகை

### 3.5.1 பெறுகை திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பெறுகை வழிகாட்டல் கோவையின். 2.4.1 வழிகாட்டலின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான பெறுகை செயற்பாடு திட்டமொன்றும் அதற்கு துணையான பெறுகை காலஅட்டவணையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பிரதான பெறுகை செயற்பாடு திட்டமொன்றும் காலஅட்டவணையொன்றும் தயாரிக்கப்பட வேண்டும் | 2019 ஆம் ஆண்டு ஜூன் மாதம் வரை மாத்திரம் பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதாக அறியத் தருகிறேன். |